# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029170

1. District மாவட்டம் : திருப்பூர் PS காவல்நிலையம் : ஊ.த.பி Year ஆண்டு : 2019 FIR No. (மு.த.அ. எண்) : 07/2019/AC/TPR Date நாள் : 21.08.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 17.10.2018 ம் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு அன்று 18.00 மணிக்கு முன்பு. Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.8.2019 Time நேரம் : 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol. III Time நேரம் : 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : சுமார் 15 கி.மீ, தென் மேற்கே
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி : சார் பதிவாளர் அலுவலகம், பல்லடம், திருப்பூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : P.N. பிரபாகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் கோவை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. C. செல்வக்குமார், த/பெ. [illegible], சார்பதிவாளர், பல்லடம் சார் பதிவாளர் அலுவலகம், பல்லடம்.
   (2) திருமதி. J. [illegible], க/பெ. [illegible], நிர்வாக இணை சார்பதிவாளர், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம்.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   துறை ரீதியான அனுமதி பெறுவதால் தாமதம்.

* GCP 240-34(Type 2) 90.000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு ~~எடுத்துக்கொள்ளப்பட்டது~~ / பணிக்கப்படுதல் B. கீதாலட்சுமி பதவி காவல் ஆய்வாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு லஞ்ச ஒ. பிரிவு, திருப்பூர்.........! காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 21/08/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 21/08/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.08.2019

Name: பெயர் R. ராஜேஸ்வரி
Rank: நிலை ...................... No. எண் ௭.......
காவல் ஆய்வாளர்,
லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருப்பூர். 21.08.2019.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

<u>கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக...</u>

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/2019/AC/TPR சட்டப் பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் (திருத்தப்பட்டது) 2018 மற்றும் 102 கு.வி.மு.ச வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

18.10.2018-ம் தேதி காலை சுமார் 07.30 மணிக்கு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த G.வெங்கடேஸ்வரி அவர்கள் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது, கோயமுத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.N.பிரபாகரன் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்தார். அந்த மனுவினை காவல் ஆய்வாளர் G.வெங்கடேஸ்வரி அவர்கள் பெற்று இயக்குனர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை அவர்களுக்கு 18.10.2018-ம் தேதி 08.00 மணிக்கு அனுமதி கோரி அனுப்பி வைத்திருந்தார். அதன்படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அனுமதியின் பேரில் மேற்படி காவல் ஆய்வாளர் திருமதி. G.வெங்கடேஸ்வரி பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் இன்று 21.08.2019-ம் தேதி 16.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 7/2019/AC/TPR u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 மற்றும் 102 Cr.P.C. ஆக பதிவு செய்த வழக்கின் புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர்: திரு.P.N.பிரபாகரன், ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.409/2018-I-1 நாள்.18.10.2018 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - திருப்பூர் மாவட்டம் - சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம் - 17.10.2018 அன்று திடீர் தணிக்கை செய்யப்பட்டது - நடவடிக்கை எடுத்தல் - தொடர்பாக. திருப்பூர் மாவட்டம் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர்கள் மற்றும் அவர்களுடைய அலுவலர்கள் பத்திரபதிவு, பத்திர நகல் அளித்தல் மற்றும் வில்லங்க சான்று அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் அலுவலக நேரத்திலும் அதற்கு பின்பும் கையூட்டாக பணம்

பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 17.10.2018-ம் தேதி மாலை 18.00 மணிக்கு பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் நடவடிக்கை தொடர்பான நடவடிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.1,35,650/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) விசாரணைக்காகவும், மேல்நடவடிக்கைக்காகவும் பல்லடம் சார்பதிவாளர் திரு.க.செல்வகுமார் மற்றும் பல்லடம் தற்காலிக இணைச்சார்பதிவாளர் திருமதி. ஜெ.ஆனந்தி ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதை தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மேலும் தொடர்புடைய ஆவணங்களின் நகல்கள் விசாரணைக்காக பெறப்பட்டதையும் தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதன்படி விசாரணை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஒப்பம் xxxxஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,கோவை மாவட்டம். Sir, The above said complaint was received by Tmt.G.Venkateshwari, the then Inspector of Police, V & AC, Tiruppur on 18.10.2018 at 07.30hrs and the same was sent to the Director, V& AC, Chennai for getting approval. After getting approval from DVAC, Chennai u/s 17(A) of Prevention of Corruption (Amendment) Act, 2018, today 21.08.2019, I registered a case in Tiruppur V & AC Cr.No. 7/2019/AC/TPR u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. at about 16.00hrs. ஒப்பம்.R.எழிலரசி, Inspr. V&AC,TPR.

நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு: இன்று 17.10.2018ம் தேதி புதன்கிழமை மாலை 18.00 மணிக்கு திருப்பூர் மாவட்டம், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.G.வெங்கடேஸ்வரி அவர்களால் தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை:1.திரு.P.N.பிரபாகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம். 2. திருமதி.G.வெங்கடேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருப்பூர். 3. திருமதி.R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 17.10.2018-ம் தேதி திருப்பூர்

மாவட்டம், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர்கள் மற்றும் அவர்களுடைய அலுவலர்கள் பத்திரபதிவு, பத்திர நகல் அளித்தல் மற்றும் வில்லங்க சான்று அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் பத்திர எழுத்தர்கள் மூலமாகவும் அலுவலக நேரத்திலும் அதற்கு பின்பும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 17.10.2018 ம் தேதி 18.00மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் போது கீழ்க் கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தனர்.

1. திரு.G.செல்வகுமார் - சார்பதிவாளர் நிலை-1, பல்லடம்.
2. திருமதி.J. ஆனந்தி - தற்காலிக இணை சார்பதிவாளர், பல்லடம்
3. திரு.M.பழனிச்சாமி - உதவியாளர்,
4. செல்வி.E.பவித்ரா - இளநிலை உதவியாளர்
5. திரு.M.மூர்த்தி - அலுவலக உதவியாளர்
6. திருமதி.சம்பூர்ணா - தகவல் தொகுப்பு பணியாளர்
7. திருமதி. மாலதி - தகவல் தொகுப்பு பணியாளர்
8. திருமதி. நூர்ஜகான் - தகவல் தொகுப்பு பணியாளர்
9. திருமதி. செல்வி - கேமரா ஆப்பரேட்டர்

ஆகியோர்கள் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்தார்கள். அவர்களுடன் கீழ்கண்ட தனிநபர்கள் மேற்படி அலுவலகத்திற்குள் இருந்தனர்.

1. திருமதி.சத்யா க/பெ.முத்துசாமி
2. திரு.மாரப்பன் த/பெ.கருப்பண்ணன்
3. திரு.கேசவன் த/பெ.சுப்பையா
4. திரு.A.குப்புச்சாமி த/பெ.ஆறுமுகம்
5. திரு.சஞ்சீவ்குமார் த/பெ.மணி
6. திரு.S.சந்தோஷ் த/பெ.சங்கர்
7. திரு.சர்புதீன் த/பெ. ஜெய்னுலாபுதீன்

பல்லடம் சார்பதிவாளர் அலுவலகமானது பல்லடம் மங்களம் ரோட்டில் கிழக்கே மேற்கு பார்த்தவாறு முகப்பு நுழைவாயில் அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகமானது உள்நுழைவாயில் மேற்குப் பார்த்தவாறு அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்த போது சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் Bio Metric Camera system-ல் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஸ்கேனுக்கு அனுப்புவதற்கு கைரேகைகள் பதிவு செய்து கொண்டிருந்தார். தற்காலிக இணை சார்பதிவாளர் திருமதி.J. ஆனந்தி அவரது இருக்கையில் அமர்ந்து கள ஆய்வு செய்த விபரங்களை கணினியில் பதிவு செய்து கொண்டிருந்தார். உதவியாளர் திரு.M.பழனிச்சாமி அவரது அறையில் இருந்தார். இளநிலை உதவியாளர் செல்வி.பவித்திரா சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்களுடன் Bio Metric Camera System-ல் கணினியில் பணி செய்து கொண்டிருந்தார். சார்பதிவாளரிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.G.வெங்கடேஸ்வரி தன்னையும் தன்னுடன் வந்த காவல் ஆய்வாளர் திருமதி.R.கௌசல்யா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.N.பிரபாகரன் மற்றும் காவலர்களையும் அறிமுகப்படுத்தி திடீர் தணிக்கை விபரம் தெரிவிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது Bio Metric Camera System-ல் கணினியில் கிழக்கு பார்த்து அமர்ந்து பணிபுரிந்து கொண்டிருந்த நபரை விசாரிக்க தன் பெயர் G.செல்வகுமார் என்றும் தான் இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக 01.08.2018 முதல் பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவர் அருகே Bio Metric Camera System-ல் பணி செய்து கொண்டிருந்தவரை விசாரிக்க தன் பெயர் பவித்ரா என்றும் தான் இளநிலை உதவியாளராக 31.01.2018 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். திருமதி. ஜெ.ஆனந்தி தற்காலிக இணை சார்பதிவாளர் என்று எழுதப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க தனது பெயர் ஆனந்தி என்றும் தான் தற்காலிக இணை சார்பதிவாளராக கடந்த 03.08.2017 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அலுவலகத்தில் தெற்கு பக்கம் உள்ள அறையில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் பழனிச்சாமி என்றும் தான் உதவியாளராக கடந்த 07.08.2017 முதல் பணிபுரிந்து வருவதாகவும் இன்று தலைமை எழுத்தர் பொறுப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார். அலுவலகத்தின் மேற்கு பக்கத்தில் கணினி அறை அருகில் நின்றிருந்த நபரை விசாரிக்க

தனது பெயர் மூர்த்தி என்றும் தான் அலுவலக உதவியாளராக கடந்த ஜூலை-2017-ம் வருடம் முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். கணினி அறையில் இருந்த மூன்று நபர்களில் ஒருவரை விசாரிக்க தனது பெயர் மாலதி என்றும் தான் தகவல் தொகுப்பு பணியாளராக கடந்த 06.03.2018 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரது அருகில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் சம்பூர்ணா என்றும் தான் தகவல் தொகுப்பு பணியாளராக 06.11.2017-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் சத்யா என்றும் தான் ஜூலை-2018 முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும் சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்கள் கூறியதன் பேரில் தொடர்ந்து பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் வில்லங்க சான்றுக்கான ரசீதை கணினியில் எடுத்துக் கொடுக்கும் வேலையை செய்வதாகவும் அதற்கு வாரம் ஒரு முறை ரூ.1,500/-ஐ தலைமை எழுத்தர் திரு.செல்வராஜ் அல்லது சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் ஆகியோர்கள் யாரேனும் ஒருவர் வழங்குவார்கள் என்றும் தெரிவித்தார். அலுவலகத்தின் வடக்கில் உள்ள பதிவு வைப்பறையில் இருந்த நான்கு நபர்களில் ஒருவரை விசாரிக்க தனது பெயர் நூர்ஜகான் என்றும் தான் தகவல் தொகுப்பு பணியாளராக கடந்த 02.07.2018 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் செல்வி என்றும் தான் கேமரா ஆப்பரேட்டராக கடந்த 11.11.2013-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் மாரப்பன் என்றும் தான் மார்ச்-2018 முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும், அலுவலகத்தில் ஜெராக்ஸ் எடுக்கும் வேலையை மற்றும் சார்பதிவாளர் கூறும் வேலை செய்து வருவதாகவும் அதற்கு தினந்தோறும் ரூ.200/-ஐ சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்கள் வழங்குவார் என்றும் தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் சஞ்சீவ்குமார் என்றும் தான் ஜூலை-2018 முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு டீ, காபி, சாப்பாடு வாங்கி வந்து கொடுப்பது அவர்கள் சொல்லும் வேலைகளை செய்வதாகவும் அதற்கு தனக்கு ரூ.400/-ஐ சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்கள் வழங்குவார் என்றும் தெரிவித்தார். அலுவலக அறையில் நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் கேசவன் என்றும் தான் பல்லடத்தில் 'VIP

Computers' என்ற பெயரில் அலுவலகம் வைத்துள்ளதாகவும் ஆவணங்கள் தயார் செய்தல், முத்திரைத் தாள் விற்பனை செய்தல் மற்றும் வில்லங்க சான்று பெற்றுத் தரும் வேலைகளை செய்து வருவதாகவும், தனது வாடிக்கையாளரின் சொத்தினை களப்பணிக்குச் சென்று பார்வையிட சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்களை சந்திக்க வந்திருப்பதாக கூறினார். மேற்படி நபர் அருகே நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் குப்புசாமி என்றும் தான் அரசு அலுவலகங்களுக்குச் சென்று அங்குள்ள அலுவலர்கள் கொடுக்கும் அரசு பதிவேடுகளை பைண்டிங் செய்து கொடுத்து வருவதாகவும் இன்று பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள அலுவலக உதவியாளர் திரு.மூர்த்தி கொடுத்த பதிவேடுகளை பைண்டிங் செய்து கொண்டிருந்ததாக தெரிவித்தார். அவர் அருகே இருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் சந்தோஷ் என்றும் தான் எழில் பத்திர அலுவலகத்தில் பகுதி நேரமாக பணிபுரிவதாகவும் தனது வாடிக்கையாளரின் சொத்தினை களப்பணிக்குச் சென்று பார்வையிட சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார் அவர்களை சந்திக்க வந்திருப்பதாக கூறினார். அவரது அருகில் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் சர்புதீன் என்றும் தனது நண்பருக்காக வில்லங்க சான்று தலைமை எழுத்தரிடம் பெற்றுக் கொண்டு நின்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். அனைத்து பணியாளர்களையும் சார்பதிவாளர் இருக்கையின் அருகே வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பிறகு காவல் ஆய்வாளர் அரசு சாட்சிகள் உதவியுடன் சார்பதிவாளரின் இருக்கையை தணிக்கை செய்தார். அப்போது சார்பதிவாளரிடம் இருக்கும் பணம் பற்றிக் கேட்க ரூ.4,790/-ஐ அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட் பர்ஸில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதை பற்றிக் கேட்க அவர் அவரது சொந்தப் பணம் என்றும் கூறினார். தனி நபர் பணப்பதிவேட்டைப் பார்வையிட 17.10.2018-ம் தேதியன்று சார்பதிவாளர் திரு.செல்வகுமார் அவர்கள் பெயரில் எந்த தொகையும் குறிப்பிடப்படவில்லை. எனவே கணக்கில் வராத மேற்படி தொகையை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் திரு.செல்வகுமார் அவர்களின் இருக்கைக்கு வலது புறம் உள்ள இரும்பு அடுக்கில் சோதனை செய்த போது அதன் இரண்டாவது அடுக்கில் காக்கி நிற கவரில் 500 ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அதனை எண்ணிப் பார்க்க மொத்தமாக ரூ.1,00,000/- (ஒரு லட்சம்) இருந்தது. அந்த பணத்தைப் பற்றிக் சார்பதிவாளர் திரு.செல்வகுமார்

அவர்களிடம் கேட்க அவர் அந்த பணம் தனது இரும்பு அடுக்கிற்கு எப்படி வந்தது என்று தெரியாது என்று கூறினார். மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றினார். மேலும் அவரது மேஜையின் வலது பக்கம் மூன்று அடுக்கு கொண்ட டிராயரில் மேல் டிராயரை சோதனை செய்த போது அதில் 200, 100, 50,10ரூபாய் நோட்டுக்கள் மடித்த நிலையில் காணப்பட்டது. அதை எண்ணிப் பார்த்த போது மொத்தமாக ரூ.860/- இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி சார்பதிவாளர் திரு.செல்வகுமாரிடம் கேட்க பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். எனவே அந்தப் பணத்தை விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. தற்காலிக இணை சார்பதிவாளர் திருமதி.J. ஆனந்தி இருக்கையை சோதனை செய்த போது அவரது இருக்கைக்கு பின்புறம் வைக்கப்படிருந்த கருப்பு நிற பேக்கினை சோதனை செய்த போது 2,000, 500 ரூபாய் நோட்டுகள் மடித்த நிலையில் காணப்பட்டது. அதை எண்ணிப் பார்க்க ரூ.30,000/- இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி தற்காலிக இணை சார்பதிவாளர் திருமதி.J. ஆனந்தி அவர்களிடம் விசாரிக்க அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். எனவே அந்தப் பணத்தை விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அவரது இருக்கையின் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த கைப்பையை சோதனை செய்ய அதில் 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அதனை எண்ணிப்பார்க்க ரூ.440/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதன் பேரில் தனி நபர் பணபதிவேட்டினைப் பார்வையிட்டதில் அவரது பெயரில் ரூ.440/- குறிப்பிடப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தலைமை எழுத்தர் அறையில் அமர்ந்திருந்த உதவியாளர் திரு.பழனிச்சாமி என்பவரிடம் பணம் பற்றி கேட்க தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து 50, 10 ரூபாய் நோட்டுக்களை ஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்க ரூ.110/- இருந்தது. அவரிடம் அது பற்றி விசாரிக்க அது தனது சொந்தப் பணம் என்று கூறியதன் பேரில் தனி நபர் பணபதிவேட்டினைப் பார்வையிட்டதில் அவரது பெயரில் ரூ.310/- குறிப்பிடப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மீதி பணத்தைப் பற்றி விசாரிக்க ரூ.200/-ஐ செலவு செய்து விட்டதாகவும், மீதி தொகையை வைத்திருப்பதாகவும் கூறினார். எனவே அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த இளநிலை உதவியாளர் செல்வி.பவித்ரா என்பவரை விசாரிக்க தனது இளம் சிவப்பு நிற

கைப்பையில் இருந்து 500, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுக்களை ஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.1,200/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதன் பேரில் தனி நபர் பணபதிவேட்டினைப் பார்வையிட்டதில் அவரது பெயரில் ரூ.1,200/- குறிப்பிடப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் மூர்த்தி என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து 100, 50, 20, 10 நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.2,000/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதன் பேரில் தனி நபர் பணபதிவேட்டினைப் பார்வையிட்டதில் அவரது பெயரில் ரூ.2,000/- குறிப்பிடப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.சம்பூர்ணா என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது பச்சை நிற கைப்பையில் இருந்து 200, 100, 50, 10 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.770/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.770/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.மாலதி என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது பிரவுன் நிற கைப்பையில் இருந்து 20 ரூபாய் நோட்டும், 5 ரூபாய் நாணயங்களையும் எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.35/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.35/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.நூர்ஜகான் என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது கருப்பு நிற கைப்பையில் இருந்து 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப் பார்க்க மொத்தம் ரூ.500/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.500/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. கேமரா ஆப்பரேட்டர் திருமதி.செல்வி என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது வெள்ளை மற்றும் பிரவுன் நிறம் கலந்த கைப்பையில் இருந்து 20, 10 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப் பார்க்க மொத்தம் ரூ.40/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.40/-ஐ அவரிடமே திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. தற்காலிக பணியாளர் திருமதி.சத்யா என்பவரிடம் பணம் பற்றி விசாரிக்க தனது கருப்பு நிற கைப்பையில் இருந்து 500, 200, 100, 50, 20,10 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப் பார்க்க மொத்தம் ரூ.1630/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.1630/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தனி நபர்கள் திருமதி.சத்யா, திரு.மாரப்பன், திரு.சஞ்சீவ்குமார் ஆகியோர் குறித்து திரு.செல்வகுமார் அவர்களிடம் விசாரிக்க வேலைப் பளுவின் காரணமாக தனி நபர்கள் வைத்துள்ளதாக தெரிவித்தார். இன்றைய (17.10.2018) தேதியில் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான கணக்குகளான 1) 'A' கணக்கு ரூ.1,120/-பணமாகவும், ரூ.6,04,881/-e-payment ஆகவும், 2) 'B' கணக்கு ரூ.10/-ரொக்கமாகவும், 3)'C' கணக்கு - (கொடிநாள் வசூல்) NIL, 4)'D' கணக்கு ரொக்கமாக ரூ.38,444/-ன் e-payment ஆக ரூ.27,743 ஆகவும், 5) E கணக்கு - NIL 6) பிரிவு 41 கணக்கு ரொக்கமாக ரூ.80/- e-payment ஆக ரூ.6,11,318/- ஆகவும், 7) உட்பிரிவு ரொக்கமாக ரூ.210/- ஆகவும் e-payment ஆக ரூ.1,390/- ஆகவும், 8) பிறப்பு இறப்பு கணக்கு ரொக்கமாக ரூ.300/-, 9) RTI கணக்கு - NIL, 10) I.PCamera கணக்கு ரொக்கமாக ரூ.100/-ம் e-payment ஆக ரூ.3,150/-, 11) இந்து திருமணச் சட்ட கணக்கு - NIL, 12) தனித் திருமணச் சட்ட கணக்கு - NIL ஆக மொத்தம் ரொக்கமாக ரூ.40,264/- இருந்தது. அலுவலகத்தில் உள்ள பணப்பெட்டியை சோதனை செய்த போது ரூ.40,264/- பணம் சரியாக இருந்தது. D.D–NIL. இன்றைய தினம் மொத்தம் 65 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் திடீர் தணிக்கையின் போது அலுவலக வருகை பதிவேடு, Data Entry Operator வருகைப் பதிவேடு, தனிநபர் பண இருப்பு விபர பதிவேடு, A (Section 41 சேர்த்து), B, C, D, E கணக்குகள், உட்பிரிவு கணக்கு, பிறப்பு இறப்பு கணக்கு, I.P கேமரா கணக்கு, RTI கணக்கு, இந்து திருமணச் சட்ட கணக்கு, தனி திருமண சட்ட கணக்கு ஆகியவற்றின் நகல் எடுத்து சார்பதிவாளரிடம் சான்றொப்பம் பெறப்பட்டது. அலுவலக வருகைப் பதிவேட்டைப் பார்வையிட அதில் இன்று சார்பதிவாளர் திரு.G.செல்வகுமார், தற்காலிக இணை சார்பதிவாளர் திருமதி.J. ஆனந்தி, உதவியாளர் திரு.பழனிசாமி, இளநிலை உதவியாளர் செல்வி. பவித்ரா, அலுவலக உதவியாளர் திரு.மூர்த்தி ஆகியோர்கள் கையொப்பமிட்டுள்ளனர். திடீர் தணிக்கையின்

போது கணக்கில் வராத தொகை மொத்தம் ரூ.1,35,650/-க்கு மேற்படி சார்பதிவாளர்கள் இருவரும் சரியாக முகாந்திரம் சொல்லாததால் அலுவலக பணி தொடர்பாக தனி நபர்களிடம் வசூல் செய்த லஞ்சப்பணம் என்று கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கை சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களுக்கு எவ்வித இடையூறு இன்றியும், பொருட்களுக்கு எவ்வித சேதம் இன்றியும், கண்ணியத்துடன் மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கை முடித்து அலுவலக பொறுப்பை சார்பதிவாளர் திரு.G.செல்வகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது இன்று 17.10.2018-ம் தேதி மாலை 18.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.45மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம் xxxx திரு.G.செல்வகுமார் வயது 53, த/பெ.கணேசன்,.சார்பதிவாளர், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம். ஒப்பம் xxxx திருமதி. J.ஆனந்தி, வயது 52, க/பெ.கலைச்செல்வன், தற்காலிக இணை சார்பதிவாளர், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம், பல்லடம், ஒப்பம் xxxx திரு.P.N.பிரபாகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம். ஒப்பம் xxxx திருமதி.G.வெங்கடேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருப்பூர். ஒப்பம் xxxxதிருமதி.R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்.

எதிரி-1 திரு.செல்வக்குமார், சார்பதிவாளர், பல்லடம், திருப்பூர் மாவட்டம் மற்றும் எதிரி-2 திருமதி.ஆனந்தி, தற்காலிக இணை சார்பதிவாளர், பல்லடம், திருப்பூர் மாவட்டம் ஆகியோர்கள் சட்டப்பிரிவு 2(c) ஊழல் தடுப்பு (திருத்தப்பட்டது) சட்டம் 2018-ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,35,650/- அரசு கணக்கில் உள்ள தொகை அல்ல. மேற்படி தொகை அலுவலகத்தில் இருந்ததற்கு மேற்படி அலுவலகத்திற்கு பொறுப்பில் இருந்த மேற்படி எதிரிகள் இருவரும் சரியான முகாந்திரம் எதுவும் சொல்லாததாலும் எதிரிகள் 1.திரு.செல்வக்குமார், சார்பதிவாளர், பல்லடம், திருப்பூர் மாவட்டம் மற்றும் எதிரி-2 திருமதி.ஆனந்தி, தற்காலிக இணை சார்பதிவாளர், பல்லடம், திருப்பூர் மாவட்டம் ஆகியோர்கள் தங்களின் அரசு கடமையை செய்ய பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக மேற்படி தொகையை பெற்றுள்ளார்கள் என்பது தெரியவருகிறது. எனவே இதுகுறித்து விசாரித்து அறிய வேண்டியுள்ளதால் மேற்படி எதிரிகள்

மீது இன்று 21.08.2019 ஆம் தேதி 16.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019/AC/TPR u/s.7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 மற்றும் பிரவு 102 CrPC படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், 18.10.2018-ம் தேதியன்று கோயமுத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.N.பிரபாகரன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மற்றும் அன்று தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசலையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது. இதன் நகலை உத்தரவுப்படி புலன்விசாரணைக்காக நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி அவர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

R. [signature] 21/8/19
Inspr. V&AC, TPR.